செய்தி வெளியீடு எண். 61 நாள்: 29.01.2018

# திருவள்ளூர் மாவட்டத்தில் 526 கிராம ஊராட்சிகளிலும் 30.01.2018 அன்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

காந்தியடிகளின் நினைவு நாளான ஜனவரி 30-ந் தேதி உலக தொழுநோய் ஒழிப்பு தினமாக நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இதை முன்னிட்டு 'ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு பிரசாரம்", வருகிற ஜனவரி 30 முதல் பிப்ரவரி 13 தேதிவரை நடைபெறவுள்ளதை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 526 கிராம ஊராட்சிகளிலும் 30.01.2018 அன்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறவுள்ளது.

சிவந்த அல்லது வெளிர்ந்த உணர்ச்சியற்ற தேமல் தொழுநோயின் ஆரம்ப அறிகுறியாகும், ஆரம்ப நிலை சிகிச்சை எடுப்பதால் உடல் ஊனத்தை கட்டுபடுத்தலாம், இதற்கு ஆலோசனை மற்றும் சிகிச்சை அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. கூட்டு மருந்து சிகிச்சை தொழுநோயை முற்றிலுமாக குணப்படுத்துகிறது. இக்கருத்துக்களை மக்களிடையே சென்றடையும் விதமாக மாவட்ட ஆட்சியரின் தொழுநோய் பற்றிய செய்தியும், கிராம சபை பிரமுகரின் பேச்சும், ஸ்பர்ஷ் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளிலும் ஜனவரி 30 அன்று தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு பேச்சும், தொழுநோய் பற்றிய மாவட்ட ஆட்சியரின் அறிக்கையும், ஸ்பர்ஷ் உறுதிமொழி ஏற்பும் செயல்படுத்தபட உள்ளது.

தொழுநோயால் ஊனமுற்றோர்க்கு அரசின் உதவித்தொகை ஒவ்வொரு மாதமும் ரூ. 1,500/– வழங்கப்படுகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர் ஊனம் வராமல் தடுப்பதற்கு ஊனத்தடுப்பு முகாம் அனைத்து வட்டார சுகாதார நிலையங்களிலும், பூந்தமல்லி பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள மாவட்ட துணை இயக்குநர் மருத்துவப்பணிகள் (தொழுநோய்) அலுவலகத்திலும் பிரதிமாதம் நடைபெறுகிறது.

மேலும், இந்நோயினால் ஊனம் உள்ளவர்களுக்கு மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை அங்கிகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் செய்யப்படுகிறது. அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு ரூ. 8,000/- ஊக்கத் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

இந்நோய் மைக்கோ பாக்டீரியம் லெப்ரே என்னும் பாக்டீரியாவினால் வரக்கூடியது. இயற்கையாகவே நம்மிடமுள்ள நோய் எதிர்ப்பு சக்தியினால் இந்நோய் நம்மை எளிதில் பாதிப்பதில்லை. இந்த ஸ்பர்ஷ் தொழுநோய் பிரச்சாரத்தின் நோக்கமே அனைவரும் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெற்று பயனடைய வேண்டும்.

மகாத்மா காந்தி தொழுநோயாளிகள் மீது கொண்டிருந்த கருணையையும், சேவையையும் கருத்தில் கொண்டு அவரின் நினைவு நாளான ஜனவரி 30 அவருடைய கனவை நினைவாக்கும் விதத்தில் தொழுநோய் இல்லா இந்தியா படைப்போம் என்று உறுதி ஏற்போம்.

இந்த கிராம சபை கூட்டத்தில் பெருவாரியான மக்கள் பங்கேற்கும் பொருட்டு கிராம ஊராட்சிகளில் முழுமையான அறிவிப்புகள் மற்றும் விளம்பரங்கள் செய்து சிறப்பான முறையில் கிராம சபை கூட்டத்தை நடத்திடுமாறு அனைத்து ஊராட்சி ஒன்றிய தனி அலுவலா் / வட்டார வளா்ச்சி அலுவலா் (கி.ஊ)களை மாவட்ட ஆட்சித்தலைவா் அவா்கள் கேட்டுக்கொண்டுள்ளாா்.

கிராம சபை கூட்ட ஏற்பாடுகளை கண்காணிக்கவும், பார்வையிடவும் ஊராட்சி ஒன்றிய அளவில் உதவி இயக்குநர் நிலையில் மண்டல அலுவலர்களையும் நியமித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**